அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

169

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ரோகன விஜயவீரவின் கடைசி நாட்கள்

அரசு ஏனைய இயக்கங்களுடன் பேச்சு நடத்துவது குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சி என்றே புலிகள் கருதினர்.

இந்திய அரசு செய்தது போல, ஏனைய இயக்கங்களை குறைந்த பட்ச தீர்வுகளுக்கு முதலில் இணங்கவைத்துவிட்டு, பின்னர் புலிகளையும் அத்தீர்வை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கும் இராஜதந்திரத்தை பிரேமதாசாவும் கையாளப்போகிறாரோ என்று புலிகள் சந்தேகப்பட்டனர்.

. எனவே, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருடன் பிரேமதாசா அரசாங்கம் பேச்சு நடத்தியதற்கு புலிகள் தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர்.

பிரேமதாசாவுக்கு புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையை முறிக்கும் எண்ணம் இல்லையென்றாலும், புலிகளை இயக்கத்தை மட்டும் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரித்தால், அவர்கள் கேட்பதை கொடுக்க வேண்டி இருக்குமோ என்ற தந்திர யோசனையும் இருந்தது.

ஜே.வி.பி.யை முற்றாக ஒழித்துக் கட்டிய பின்னர் புலிகளுடன் பேச்சு நடத்துவதுடன், ஏனைய கட்சிகளையும் பேச்சுக்கு அழைக்கலாம் என்று திட்டம் வைத்திருந்தார் ஜனாதிபதி.

விரைவில் ஜே.வி.பி.யை ஒழித்து விடலாம், அதன் தலைவரான ரோகன விஜயவீரவையும் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையை பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் பிரேமதாசாவுக்கு வழங்கியிருந்தன.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்னவின் முயற்சியால், ரோகனாவையும், ஜே.வி.பி.யையும் ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகள் படு தீவிரமாக நடந்து வந்தன.

ரோகன விஜயவீர பிடிபட்டால் கொன்றுவிடவேண்டும் என்று திட்டவட்டமாக முடிவு செய்திருந்தார் ரஞ்சன்.

ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகளை தட்டிக்கொடுத்து ஊக்குவித்தவர் ரஞ்சன்தான்.

ரஞ்சனின் வழிநடத்தலில் ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும் கடைசிக் கட்டத்திற்குள் பிரவேசித்தது பாதுகாப்புத் துறை.

## ரோகன விஜயவீர

இக் கட்டத்தில் ரோகன விஜயவீரவின் கடைசி நாட்களைப் பற்றி வாசகர்களுக்கு கண்டிப்பாகத் தெரிவித்தேயாக வேண்டும்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஒன்றுதிரட்டி இரண்டு தடவைகள் மாபெரும் ஆயுதக் கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கியவர் ரோகன விஜயவீர.

1971ல் நடைபெற்ற கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி.யின் கதை முடிந்தது என்று கருதப்பட்டது.

கதை முடியவில்லை. 1987ல் வடக்கு-கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகள் எங்கும் ஆயுதக் கிளர்ச்சி வெடித்துக் கிளம்பியது.

ஏறக்குறைய இரண்டு வருடகாலம் நாட்டையே ஆட்டிப்படைத்தது ஜே.வி.பி.

ரோகன விஜயவீரவின் கொள்கைகள் பற்றிய மதிப்பீடுகள் எப்படி இருப்பினும், ரோகன விஜயவீரவின் திறமைகளையும், மக்களைக் கவரும் ஆளுமைத் திறனையும் பாராட்டாமல் இருக்க முடியாது.


யார் வேண்டுமானாலும் கட்சி நடத்தலாம். ஆனால் யார் வேண்டுமானாலும் கட்டுப்பாடுடைய, போர்க்குணமிக்க ஆற்றலுடைய, எதற்கும் தயாரான கட்சியை கட்டியமைக்க முடியாது.

ரோகன விஜயவீர புரட்சிகரக் கட்சியையும், அதற்குரிய புரட்சிகர இராணுவத்தையும் ஒழுங்கமைப்பதிலும், ஆற்றலுடன் கட்டியெழுப்புவதிலும் குறிப்பிடத்தக்க திறனுடையவராக இருந்தார்.

பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. தேர்தல்கள் மூலம் தலைமைகளும் உருவாக மாட்டாது.

மக்கள் எப்போதுமே சரியாகத் தீர்மானிப்பார்கள், சரியானவர்களுக்கு வாக்களிப்பார்கள், சரியான கருத்தினை பற்றி நிற்பார்கள் என்று உத்தரவாதம் கிடையாது.

மக்கள் தாமாகவே சரியான முடிவுகளுக்குச் செல்வர் என்றால், தலைவர்கள் தோன்றும் அவசியம் இருந்திருக்காது.



தாடியில்லாத ரோகன விஜயவீர

தவறான சக்திகள் மக்களை ஏமாற்றி பதவிக்கு வரவும், தங்களை தலைவர்களாக கூறிக்கொள்ளவும் தேர்தல்கள் பயன்படுவது உண்டு.

போலி வாக்குறிகள், ஏமாற்று, மோசடி என்பவைதான் பலசமயங்களில் தேர்தலில் வெற்றி வாய்ப்பை தீர்மானிக்கின்றன.

தூய்மையான தேர்தல், நியாயமான தேர்தல் என்பதெல்லாம் சுத்த ஏமாற்றுக் கதைகள். அதுவும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தற்போதைக்கு நியாயமான தேர்தல் என்பதற்கு வாய்ப்பே இல்லை.

எனவேதான் தேர்தல் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை புரட்சியாளர்கள் ஏற்பதில்லை.மக்களை போராட்டங்களுக்கு அணிதிரட்டுகிறார்கள். ஆயுதம் ஏந்தாத போராட்டங்கள் தோல்வி காணும்போது ஆயுதம் ஏந்திய போராட்டங்களுக்கு தயார்படுத்துகிறார்கள்.

சில சமயங்களில் தேர்தல்களிலும் அவர்கள் பங்குபற்றுவர். அவ்வாறு பங்கு கொள்வது தேர்தல் முறைகளில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக அல்ல.

தங்கள் கருத்துக்களை பகிரங்கமான முறையில், பரவலாக வெளிப்படுத்துவதற்காகவும், அரசாங்கத்தால் முளையிலேயே கிள்ளி எறியப்படாமல் தங்கள் அமைப்பை வளர்த்துக் கொள்வதற்காகவும், சட்ட பூர்வ வாய்ப்புக்கள், சட்டபூர்வ பாதுகாப்புக்கள் என்பவற்றை குறிப்பிட்ட காலம் பயன்படுத்துவதற்காகவுமே தேர்தல்களில் போட்டியிடுவர். பதவிகள் கிடைத்தால் அவற்றையும் பயன்படுத்துவர்.

## போட்டியும், தவிர்ப்பும்

தேர்தல்களில் எப்போது போட்டியிடலாம்? எப்போது போட்டியிடக்கூடாது என்பதும் முக்கியம்.

மக்களின் எழுச்சிகளையோ, அல்லது மக்களின் உணர்வுகளையோ திசை திருப்ப அரசாங்கங்கள் தேர்தல்களை நடத்துமானால் அவற்றை நிராகரிக்க வேண்டும்.

புரட்சி எழுச்சிக்கான தேவைகள் சிலவற்றை நிறைவேற்றலாம் என்ற நிலையிலோ, அல்லது, பாராளுமன்றம் மற்றும் நிறுவனங்களில் மக்கள் நம்பிக்கை கொண்டு நிற்கும் சூழ்நிலையில், அந்த நிறுவனங்களுக்கு சென்று அங்கிருந்தே அவற்றை அம்பலப்படுத்தும் தேவைக்காகவும் தேர்தலில் போட்டியிடலாம்.

1971ல் ஜே.வி.பி. கிளர்ச்சி மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. ரோகனவிஜயவீர உட்பட பல தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

1977ல் ஐ.தே.கட்சி பதவிக்கு வந்த பின்னர் ஜே.வி.பி.யினரை விடுதலை செய்தது. ஆயினும் ஜே.வி.பி. மறுபடி ஆயுதக் கிளர்ச்சிக்கு தயாராகிறதா? என்பதை அரசின் உளவுத்துறை கண்கொத்திப் பாம்பாக கவனித்து வந்தது.

அதனால் தங்களை தேர்தலில் நம்பிக்கை கொண்ட கட்சியாக வெளியே காண்பித்தபடி, மறைமுகமாக ஆயுதக்கிளர்ச்சி நடவடிக்கைக்கான தயாரிப்புக்களில் ஈடுபடத் தொடங்கியது ஜே.வி.பி.

1982 அக்டோபர் 20ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரோகன விஜயவீர போட்டியிட்டார். இரண்டு இலட்சத்து 73 ஆயிரத்தி 428 வாக்குகள் கிடைத்தன. இரண்டாவது இடத்தில் வந்தார்.

மேதின அணிவகுப்புகள், பகிரங்க அரசியல் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்று ஜே.வி.பி. மீண்டும் வளர்ந்து வந்தது.

பகிரங்க அரசியலில் சாதுவான முகத்தை காட்டிக் கொண்டு, இரகசியமாக அரசியல் வகுப்புக்கள், ஆயுதப் பயிற்சிகள் என்பவை சுறுசுறுப்பாக நடைபெற்றன.

அமைப்பை கட்டுவதில் மாத்திரமல்ல, புரட்சிகரக் கருத்துக்களைப் பிரசாரப்படுத்துவதிலும் ரோகன விஜயவீர வல்லவர்.

தமது அமைப்பில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதிலும், அவற்றை மீறுகின்றவர்களைத் தண்டிப்பதிலும் தயவு தாட்சண்யம் காட்டியதில்லை.

இலங்கையில் புரட்சிகர கம்யூனிச இயக்கங்கள் பலவும், வடக்கு-கிழக்கில் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலவும் இருந்துள்ளன.

ஆயினும், கட்டுப்பாடானதும், திடமானதுமான அமைப்பை உருவாக்கி, எதற்கும் தயாரான ஆற்றலுடன் கூடிய உறுப்பினர்களை வளர்த்தெடுத்தவர்களில் முதலிடம் பிரபாகரனுக்கு, இரண்டாவது இடத்தில் இருப்பவர் ரோகன விஜயவீர. மூன்றாம் இடம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவராக இருந்த சண்முகதாசனுக்குத்தான் என்று நினைக்கிறேன்.

ஏனைய கட்சிகள், இயக்கங்களுக்கு தலைவர்களாக இருந்தவர்களில் சிலர் ஆற்றலுள்ளவர்களையும் முனைமங்கச் செய்வதில் வல்லவர்களாக இருந்தனர். வேறு சிலர் ஓடுகிற தண்ணீரின் போக்குக்கு ஏற்ப நீந்திச் செல்பவர்களாக இருந்தனரே தவிர, தீர்க்கமான பாத்திரம் வகிப்பவர்களாகவோ, நிகழ்ச்சிப் சமகால போக்குகளை தீர்மானிப்பவர்களாகவோ இருக்கவில்லை.

ரோகன விஜயவீர ஈராக், கியூபா போன்ற நாடுகளுக்கு சென்று வந்தார். ஷம்பியா, நிக்கரகுவா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் இருந்து புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருந்தார்.



ரோகன விஜயவீர-மனைவி பிள்ளைகளுடன்

ரோகன விஜயவீரமீதும், ஜே.வி.பி.மீதும் சந்தேகம் கொண்ட அரசாங்கம் 1983ல், அவரைக் கைதுசெய்ய முயற்சித்தது.

கைதாக விரும்பாமல் தலை மறைவானார். அதனைத் தொடர்ந்து ஜே.வி.பி இயக்கத்தினரும் தலைமறைவாகவே இயங்கத் தொடங்கினர்.

பகிரங்கமாக இயங்கியபோதே எந்தத் தருணத்திலும் சட்டவிரோதமான முறையில் இரகசியமாக இயங்கக்கூடிய தயார் நிலையில் இருந்தது ஜே.வி.பி.

அதனால், ரோகன விஜயவீர தலைமறைவானதும், ஜே.வி.பி.யின் இரண்டாம் கட்டத் தலைவர்களைத் தேடி அரசாங்கம் வலை விரித்தபோது யாரும் சிக்கவில்லை.

## காட்டுக்குள்

ரோகன விஜயவீரவுக்கு 1981ல் ஒரு மகளும், 1982 ஏப்ரலில் ஒரு மகனும் பிறந்தனர்.

இரண்டு பிள்ளைகளையும்,தன் மனைவியையும் தங்காலையில் உள்ள உறவினர் வீடொன்றில் விட்டுவிட்டு கதிர்காமத்தில், செல்லக் கதிர்காமம் சார்ந்த காட்டுப் பகுதிக்குள் தனது பாதுகாவலர்களுடன் புகுந்து கொண்டார்.

தலைமறைவானதும் தனது தாடியை மழித்து, தலைமுடியையும் வித்தியாசமாக வெட்டிக்கொண்டார்.

சிறுது காலத்தின் பின்னர் தனது குடும்பத்தினருடன் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தங்கியிருந்தபடியே கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

நாடெங்கும் ரோகன விஜயவீரவை தேடிக்கொண்டிருந்தபோது, சாதாரண ஆள் போன்று நாட்டின் பல பகுதிகளுக்கு சென்று வந்தார்.

1984 ஜூலை 24ம் திகதி பதுளை மருத்துவ மனையில் மூன்றாவது பெண் குழந்தை பிறந்தது. அப்போது அத்தநாயக்கா என்ற பெயரில் நடமாடிக்கொண்டிருந்தார் ரோகன. அதனால் குழந்தைக்கும் அத்தநாயக்கா முதியான்சிலாகே மாயா என்று பெயர் வைத்தனர்.

தமது இரு பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்ப்பதற்காக வேறு பெயர்களில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் தயாரித்தனர். ரோகன விஜயவீரவின் மனைவியின் பெயரும் மாற்றப்பட்டது.

தனது மூன்று பிள்ளைகள்மீதும் மிகுந்த வாஞ்சை கொண்டிருந்தார் ரோகன விஜயவீர.

ரோகன விஜயவீர குடும்பத்தினர் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் களவு நடந்திருந்தது. அதனை விசாரிக்க பொலிசார் வந்தனர். ரோகன விஜயவீரவின் வீட்டுக்கு வந்து மனைவியிடமும் விசாரித்தனர். உங்கள் கணவர் பெயர் என்ன? அவர் எங்கே? என்றும் கேட்டுவிட்டுப் போனார்கள்.

அதனால் சந்தேகம் அடைந்த ரோகன அந்த வீட்டைக் காலி செய்தார்.

பண்டாரவளையில் நெலுவ என்ற இடத்தில் 13 ஏக்கர் தோட்டம் ஒன்றை கட்சி நிதியில், ஜே.வி.பி. முக்கிய பிரமுகர்களில் ஒருவரான சோமவன்ச அமரசிங்கவின் பெயரில் வாங்கினார்கள்.

இங்கு தங்கியிருந்த போது 1987ல் ரோகனவின் நான்காவது பிள்ளையாக பெண் குழந்தை பிறந்தது. 1988 மே 20ல் ஐந்தாவதாக ஆண் குழந்தை பிறந்தது.

1987ல் ஜூலை 29ம் திகதி ரோகன விஜவீர குடும்பம் பண்டாரவளை தோட்டத்தையும் காலி செய்துவிட்டு, இரத்தினபுரி ஊடாக பண்டாரகமவுக்கு சென்றனர்.

தொடர்ந்து ஒரே வீட்டில், ஒரே பகுதியில் இருப்பது பாதுகாப்பானதல்ல என்பதால் அடிக்கடி வீடு மாறிக் கொண்டே இருந்தனர்.

பண்டாரகமவுக்கு செல்லும்போது இரத்தினபுரியில் ஐ.தே.கட்சிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஜே.வி.பி.யினரால் அரசியல் கட்சிக் கூட்டங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் இருந்தமையால் அப்பகுதியினால் செல்லும் வாகனங்கள் பொலிசாரால் சோதனையிடப்பட்டன.

ரோகன விஜயவீர காரின் முன் ஆசனத்தில் தன் இரு பிள்ளைகளுடன் அமர்ந்திருந்தார். ஏனைய மூன்று பிள்ளைகளுடன் மனைவி பின் ஆசனத்தில் இருந்தார். காரை கமநாயக்கா செலுத்தினார்.

பொலிசார் உள்ளே பார்த்துவிட்டு தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

ரோகன விஜயவீர என்றால் தாடி வைத்திருப்பார். கண்ணாடி போட்டிருப்பார், பாதுகாவலர்கள் சகிதம் ஆயுதங்களுடன் பயங்கரமாக நடமாடுவார் என்றுதான் பொலிசார் நினைத்தனர்.

"நான்தான் ரோகன விஜயவீர" என்று அவர் கூறியிருந்தால்கூட நம்பியிருக்க மாட்டார்கள்.

ஒருநாள் ரோகன விஜய வீரகமநாயக்காவும் வெளியே சென்றுவிட்டு காரில் திரும்பிவந்தபோது, பண்டாரகம வீட்டின் முன்பாக பொலிஸ் குழு ஒன்று நிற்பதைக் கண்டனர்.

காரை ஒரு புறமாக நிறுத்திவிட்டு இருவரும் பதுங்கிக் கொண்டனர். பொலிசார் சென்ற பின்னர்தான் மனைவியிடம் சென்று விசாரித்தார்.

அருகிலுள்ள தோட்டத்திற்கு பூக்கள் கொய்ய வந்தாகவும், தவறுதலாக அங்கு வந்துவிட்டதாகவும் பொலிசார் கூறியதாக மனைவி சொன்னார்.

ரோகன அதனை நம்பவில்லை. மின்னல் வேகத்தில் அந்த தோட்டத்தைக் காலி செய்துவிட்டு, காரில் புறப்பட்டு கொழும்பு சென்றனர்.

பாதுகை என்ற இடத்தில் உள்ள இ.போ.ச. ஊழியர் ஒருவர் வீட்டில் தன் குடும்பத்தினரை ஒரு மாதம்வரை தங்க வைத்தார் ரோகன.

நுவரெலியாவில் உள்ள உலப்பனையில் இருக்கும் சென் மேரிஸ் தோட்டத்தில் உள்ள பங்களாவை கட்சி நிதியில் வாங்கியிருந்தார் சோமவன்ச அமரசிங்க.

அடிக்கடி வெளியே சென்று நடவடிக்கைகளுக்கு வழிகாட்டிவிட்டு வீட்டுக்கு திரும்புவார் ரோகன. சென் மேரிஸ் தோட்ட வீடு கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்களுக்கு மட்டும்தான் தெரிந்திருந்தது.

நாட்டின் பல பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருந்தபோது சென் மேரிஸ் தோட்ட வீடு அமைந்திருந்த உலப்பனையில் மட்டும் அமைதி நிலவியது.

அதனை துல்லியமாகச் கவனித்துவிட்டது ஜே.வி.பி.க்கு எதிரான ஒருங்கிணைப்பு நடவடிக்கை பிரிவு. அதனால் சந்தேகம் வந்துவிட்டது.

தம்மை அறியாமலேயே ஜே.வி.பி.யினர் செய்த தவறு அது. அத் தவறுதான் பெரும் விபரீதத்துக்கு அடிகோலியது.

இராணுவ வாகனம் ஒன்றும் சென் மேரிஸ் தோட்டப் பக்கம் வந்து சென்றது.

உடனடியாக அங்கிருந்து பண்டாரவளைக்குச் சென்றது ரோகனவின் குடும்பம். எனினும் இராணுவத்தினர் சென் மேரிஸ் வீட்டுப் பக்கம் அதன்பின்னர் செல்லவில்லை என்பதை அறிந்ததும், மறுபடியும் அங்கேயே திரும்பி வந்தனர்.

இக் காலகட்டத்தில் ரோகன விஜயவீரவின் பிள்ளைகள் அடிக்கடி நோய்வாய்ப்படலாயினர்.

1989 ஆகஸ்ட் 25ல் இரண்டாவது புதல்வி சுராணிக்கு சிறு நீருடன் இரத்தம் போகத் தொடங்கியது. பதுளையில் லங்கா நேர்சிங் ஹோமில் சேர்த்தனர்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதால் பதுளை பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டாள்.

பதுளை பொது மருத்துவ மனையில் ஆபத்துக் காத்திருந்தது. அது ரோகனவின் மகளது கட்டிலுக்கு அருகேயே இருந்தது.

ரோகனவின் மகளது கட்டிலுக்கு அடுத்த கட்டிலில்தான் பதுளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் குழந்தை இருந்தாள்.

ஜே.வி.பி.யினர் பொலிசாரையும் அவர்களது குடும்பத்தினரையும் பழிதீர்ப்பதால் பொலிஸ் அதிகாரியின் மகளுக்கு மருத்துவமனையில் கட்டிலுக்கு அருகே காவல் போடப்பட்டிருந்தது.

எங்கே, தங்களை அடையாளம் கண்டுவிடப்போகிறார்களோ என்று ரோகனவின் மனைவி பயந்து கொண்டிருந்தார்.

நல்ல வேளையாக யாரும் அடையாளம் காணவில்லை. கொழும்பு மருத்துவ மனைக்கு பிள்ளையை கொண்டு செல்லுமாறு மருத்துவ மனையில் கூறினர்.

1989 அக்டோபரில் சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவ மனையில் குழந்தையைச் சேர்ந்தனர்.

இக் காலகட்டத்தில் போலி அடையாள அட்டையுடன் கொழும்புக்கும், ஏனைய பகுதிகளுக்கும் ரோகன விஜயவீர தன் மனைவியுடன் சென்று வந்தார்.

சோதனையிடும் படையினரோ, பொலிசாரோ அவர்களைச் சற்றும் சந்தேகிக்கவில்லை.

எனினும் எல்லாவற்றுக்கும் முடிவான அந்த நாள் வந்தது. ரோகனவின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவனே பணத்திற்கு ஆசைப்பட்டு காட்டிக் கொடுத்தான்.

அந்த சோகமான இறுதி அத்தியாயம் அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்